ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௯. ஆங்கிரஸ வருஷ சித்திரை மீ பகுதி ௪.

Vol. 9. April & May 1932. No. 4.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து.

(124-ம் பக்கத் தொடர்ச்சி).

அம்மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென வுணர்க.

அம்மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு என்றது அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று உறுதிப்பொருள்களையும் கூறத்தொடங்கிய இவர்க்கென்றவாறு. அம்மூவரையும் வாழ்த்துதல் முறையாகலின் என்றது முற்கூறியவாற்றான் அவற்றோடியைபுடைய அம்மூவர்க்கு முதற்கடவுளை வாழ்த்துதல் முறையாகலான் என்றவாறு. இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென வுணர்க என்றது 'இக்கடவுள் வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்பட அம்மூவர்க்கு முதற்கடவுள் பரமாய்க் கூறினாரென 'வறிக என்றவாறு. முதற்கடவுளென்றது பன்னிரண்டிடங்களிலுங் கூட்டப்பட்டது ; வாழ்த்தப்படுபொருள் அதுவே யாகலின்.

மூவர்க்கும் பொதுப்படக்கூறினாரென்றும் இவ்வாக்யத்தால் அம்மூவர்க்கும் பொதுவாய் அம்மூவரையும் வாழ்த்துக்கு விஷய

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

மாக்கிக் கூறினரென்னும் பொருள் ஆபாதப்ரதீதியாய் (போலித் தோற்றமாய்)த் தோற்றுகின்றது முன் அறமுதற்பொருட்கு முதற் கடவுளோடு சம்பந்தத்தைக்கூறிப் பின்னர் அச்சம்பந்தங் காரணமாக வாழ்த்தப்படும் பொருள் மூவரெனக் கூறுவது, அறமுதற் பொருளோடு சம்பந்தமுடைய பொருளொன்றும், அதுகாரணமாக வாழ்த்தப்படும் பொருள் மற்றொன்றுமாய் மாறுபடுதலின், அது பொருளன்மை யறிக. ஆனால், அறமுதற் பொருட்கு அம் மூவரோடும் இயைபின்றோவெனின்;—அஃதுண்டு. அவ்வியைபு, அறமுதற்பொருட்கு முதற்கடவுளோடுண்டாம் பரம்பரைச் சம்பந்தத்தினை நிகழச்செய்வதாகலின், அது வாழ்த்துக்கு ஹேதுவன்றென்பது உரையாசிரியர் கருத்தாகும். அக்கருத்தின்றாயின், சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய மும்மூர்த்திகளோடு இயைபுண்டாகலான் எனல் வேண்டும்.

அகரமாகிய முதலையுடையன எழுத்துக்களெல்லா மென்றது. எழுத்துக்களெல்லாம் அகரமாகிய காரணத்தையுடையன என்றவாறு. முதல்-காரணம். அதுபோல ஆதிபகவனாகிய முதலையுடைத்து உலகு என்றது அவ்வெழுத்துக்கள்போல உலகமும் ஆதிபகவனாகியகாரணத்தையுடையது என்றவாறு. இது தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை யென்றது அகரமுதல எழுத்தெல்லாம் என்னும் இவ்வாக்யம் தலைமையைப் பொதுதன்மையாகவுடைய உதாரணமாம் என்றவாறு. எடுத்துக்காட்டுவமையாவது—உவமவுருபின்றி உவமானத்தையும் உவமேயத்தையும் தனித்தனி வாக்கியமாக நிறுத்துவது. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையான இயல்பாற் பிறத்தலானும என்றது அகரத்திற்குத் தலைமையாவது தான் பிறவெழுத்துக்களின் காரியமாகாது சப்தத்வ தாமாவசசின்ன சப்தமாத்திரத்திற்கு ஹேதுவான பொதுமுயற்சியாற் பிறத்தலானும் என்றவாறு. அஃதாவது:—அகரத்திற்குத் தலைமை இயல்பாற் பிறத்தலென்பதாம். அவ்வியல்பின் சொரூபம்

(இ-ள்.) எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன, அதுபோல உலகு ஆதிபகவனுகிய முதலையுடைத்து என்றவாறு.

உணர்ந்தன்றி அகரத்தின்கண்ணுள்ள தலைமையுணரப்படாமையான் அதனை விளக்குகின்றார் நாதமாத்திரையான் என்ற விசேஷணத்தால், நாதம்-சப்தம். ஆஃதீண்டு ப்ரகரணபலத்தால் வர்ணாத்மகமான சப்தத்தின் மேனின்றது. மாத்திரை என்றது "ஆவிறையும்" என்ற விதிப்படி மாத்திரா என்னும் வடசொற்றிரிபாதலின், அஃதீண்டு முழுதுமென்னும் பொருண்மேனின்றது. அஃதிப் பொருளாதலை "லக்ஷ்யமாத்திராவிருத்தித்வம் அசம்பவ:" என்னும் அசம்பவத்தின்லக்ஷணத்தில் மாத்திராபதம் லக்ஷ்யத்வ தர்மாவச்சின்ன லக்ஷ்யத்திலில்லாதது என்னும் போதத்திற்கு ஹேதுவாதலை யறிக. அஃதாவது—லக்ஷ்யமுழுதுமில்லாதது என்பதாம்.

ஆனதால் சப்தமாத்திரை என்பதற்கு சப்தத்வ தர்மாவச்சின்ன சப்தமாத்திரம் என்னும் பொருள் கூறப்பட்டது. ஆன என்றது பண்புருவாதலின் அஃதியல்போடு அபேதத்தைப் போதிக்கின்றது. அஃதாவது.— சப்தத்வ தர்மாவசசின்ன சப்தமாத்திரத்தாற் பிறத்தலே இயல்பாய்ப் பிறத்தலென்னும் போதத்தையுண்டாக்குகின்றது. இப்பொருளானும் இயல்பின் ஸ்வரூபம் இனிது விளங்காமையின் சப்தத்வ தர்மாவசசின்ன சப்தமாத்திரத்திற்கு ஹேதுவான பொது முயற்சியாற் பிறத்தலே இயல்பாற் பிறத்தல் என்று அவாய்நிலையால் பொது முயற்சி யென்னும் பதங்கள் வருவித்துரைக்கப்பட்டன.

இதனால் காரியதத்துவ தர்மாவச்சின்ன காரியநிரூபிதகாரணதையுடையது. சாதாரண காரணமென்னும் சாதாரண காரணத்தின் லக்ஷணப்படி சப்தத்வ தர்மாவச்சின்ன காரிய நிரூபித காரணதையுடையதான சப்தசாமானிய காரணத்தால் பிறத்தலே இயல்பாய்ப் பிறத்தலென்பதும், அதுவே அகரத்துக்குத் தலைமை யென்பதும் ஏற்படுகின்றன.

இனி சகல காரியங்கட்கும் சாதாரண காரணம், காலம், திக்கு முதலியனவாம். தத்தமக்குரிய அசாதாரண காரணங்களின்றி சாதாரண காரணத்தால் மட்டும் எவ்வித காரியங்களுந் தோன்று

இது தலைமைபற்றி வந்த எடுத்துக் காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையான இயல்பாற் பிறத்த லானும்,

---

வாதலின், அச்சாதாரண காரணத்தாற்றனே பிறத்தலை இயல்பாற் பிறத்தலென்று கூறினர். வர்ணாத்மகமான சப்தத்தின் சாதாரண காரணமென்றது சாதாரண நிமித்தகாரணத்தினை, நியாய மதப்படி சமவாயி, அசமவாயி, நிமித்தமென காரணம் மூன்றும். அவற்றுள் சப்தத்தின் சமவாயி காரணம் ஆகாசம். அசமவாயி காரணம் ஆகாசகண்டசையோகம். இவற்றின் வேறான காரணங்களெல்லாம் நிமித்தகாரணங்களாதலின், எழுத்துக்களின் பிறப்பிற்கேது வாகிய உயிர் முயற்சியும், பல்லணத் தொழில் முதலியனவும் சப்தத்தின் நிமித்தகாரணங்களாம். ஆகலின் ஈண்டுச் சாதாரண நிமித்த காரணமென்று கூறப்பட்டது. அது, வாய்திறத்தலாகிய தொழிலும் அதற்கேதுவாகிய உயிர முயற்சியுமென அறிக. இப் பிரகரணத்தில் பொது முயற்சியென்னும் சொற்கள் வந்தவிடத் தெல்லாம் இவ்விரண்டினையுமே பொருளாகக்கொள்க. வாய் திறந்த உத்தரக்ஷணத்திலே ஏனைய எழுத்துக்களை உச்சரிப்பதற் கேதுவாகிய சிறப்பு முயற்சியுண்டாகலின் வாய்திறத்தல் பொது முயற்சியென்று கூறப்பட்டது. அப்பொதுமுயற்சியினாலே அகரம் பிறக்கின்றதென்பதை "அ ஆ அங்காப்புடைய" என்னும் நன்னூற் சூத்திரத்தானறிக. இதனால் முற்கூறியவாற்றான், பிறவெழுத்துக் களின் காரியமாகாது காரணசப்த மாத்திரமாய் நிற்றலும், அசாதா ரண காரணத்தானன்றிச் சாதாரண காரணத்தாற் பிறத்தலும் அகரத்திற்குத் தலைமை யென்பது போந்தபொருளாம்.

மேலும் விகாரத்தானன்றி நாதமாத்திரையான இயல்பாற் பிறத்தலென்னும் இவ்வாக்கியத்திற்குத் தான் பிறசப்தங்களின் காரியமாகாது சப்தத்தளவான இயல்பாற் பிறத்தலென்று பொருள் கூறினும் அமையும். இப்பொருளில் நாதமாத்திரையான இயல்பென்னும் சொற்றொடர்கள் விகாரத்தானன்றி யென்னும் சொற்பொருளையே விளக்குகின்றன. அஃதாவது :—தான் பிற சப்தங்களின் காரியமாகாது, சப்த ஸ்வரூபத்தின் அபின்ன

மான ஸ்வரூபத்தோடு பிறத்தலென்பதாம். இயல்பு - தன் ஸ்வரூபத்தின் வேறுபடாமை. ஈண்டு நாதமென்றது உயிர் முயற்சியாற் றோன்றும் சப்த சாமானியத்தினையென அறிக. இதனால் சப்த சாமானிய சொரூபத்தின் அபின்னமான சொரூபமே அகாரத்தின் சொரூபம் என்பதும், அதுவே அகாரத்தின்கண்ணுள்ள தலைமையென்பதும் போந்த பொருளாம்.

இனி, நாதமாத்திரையான இயல்பாற் பிறத்தலென்பதற்கு சப்தத்தினளவாய் காரணமின்றித் தன்னடையே பிறத்தலென்னும் பொருள் ஆபாதபிரதீதியால் தோற்றுகின்றது. உற்பத்தியுடைய பதார்த்தத்திற்குக் காரணபாவத்தைக் கூறுவது புத்திமான்களின் அறிவுக்கு விஷயமன்றாதலின், அது பொருளன்மை யறிக.

வர்ணாத்மக சப்தத்தினை நித்தியமாகக்கூறும் மீமாம்சக மதப்படி நித்திய சப்தத்திற்குக் காரணபாவத்தைக் கூறுதல் சப்பவமாமெனின் இம்மதத்தில் பிறத்தல் என்று நித்திய சப்தத்திற்கு உற்பத்தியினைக் கூறுதல் சப்பவியாது. ககாரம் உண்டாயிற்று, ககாரம் நாசமடைந்தது என்னும் விவகாரம் அக்ககாரத்தின் உற்பத்தி நாசத்தினை விஷயஞ்செய்வதன்று. ஆனால் அக்ககார முதலிய எழுத்துக்களை வெளியாக்கும் விஜாதிய வாயுவின் உற்பத்தி நாசத்தினையே விஷயஞ்செய்கின்றது என்ற மீமாஞ்சகர் கூறும் சமாதானமும சப்பவியாது. ஏனெனின முற்கூறிய விவகாரத்தால் ககாரத்தின் உற்பத்திநாசமே தோற்றுகின்றது. வாயுவின் உற்பத்திநாசம் தோற்றுவதின்று எவ்விவகாரத்தினால் எவ்வர்த்தத்தின் விளக்கமுண்டாகின்றதோ அவ்வர்த்தமே அவ்விவகாரத்தின் விஷயமாகின்றது. ஆகையால் முற்கூறிய விவகாரத்தின் விஷயமாக ககாரத்தின் உற்பத்திநாசமே சித்திக்கின்றது.

மேலும் ஈண்டு அகாரத்திற்கும் மற்ற எழுத்துக்களுக்கும் காரண காரியபாவம் நூலாசிரியர் உரையாசிரியர் இருவருக்கும் தாத்பர்யமாகும். அது நித்திய சப்தங்களில் சப்பவியாமையின் வர்ணாத்மக சப்தங்களுக்கு ஈண்டு அநித்தியத்வமே அங்கீகாரம் எனக்கொள்க.

(தொடரும்).

ஸ்ரீ:

எம்பெருமானார் அவதார ரஹஸ்யம்.

——:o:——

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான்
வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(48-ம் பக்கத் தொடர்ச்சி).

கண்ணபிரான் அர்ஜுனனை நோக்கி உபதேசிக்கத் தொடங்கும்போது, அர்ஜுனன் கண்ணபிரானை நோக்கி, "ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா:, யச்ச்ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே, சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்று அடிபணிந்து ஆர்த்தி தோன்ற நின்று, எனக்குத் தர்மாதர்ம விவேகமில்லை; நீரே நிச்சயித்துச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதன்பிறகு உபதேசஞ் செய்தானாகையால் கண்ணபிரான் ஸ்வாநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யனாவான். இனி அவன் வாயினாலும் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யன் ஒருவனுளனென்று சொன்னானில்லை. "தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:" அர்ஜுன! நீ பெரியாரைக் கிட்டி அடிபணிந்து பணிவிடை செய்து அநுவர்த்தித்து ஸமயந் தெரிந்து ஸம்சயங்களை விண்ணப்பம் செய்து விஷயங்களைத் தெரிந்துகொள்வாய்; என்றருளிச்செய்கையாலே மற்ற ஆசார்யர்களும் ஸ்வாநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களே யாவர்.

மேலும், ஆசார்யர்களை உபகாரகரென்றும், உத்தாரகரென்றும் மற்றோர் வகையாகவும் வகுத்துரைப்பர். இவ்விருவருள் உபகாரகர் - சிஷ்யன் மோக்ஷத்தை யடைவதற்கு ஹேதுவான ஜ்ஞாந பக்தி வைராக்யங்களை யுண்டுபண்ணுகின்றவராவர். உத்தாரகர் - சிஷ்யனுக்கு உபதேசித்துவிடுவது மாத்திரமன்றி, இவனது மோக்ஷ ப்ராப்திக்கும் தாமே உரியவராய் நின்று ஸர்வ பாரங்களையும் ஏறிட்டுக்கொள்பவர். ஸ்வாநுவ்ருத்தி ப்ரஸந்நராய் உபகாரகரா யிருப்பவரைப்பற்றினாலும் சிஷ்யனுக்குப் பலம் தப்பாது. சிஷ்ய

னுடைய அநுவ்ருத்தி வேண்டாதே க்ருபையாலே இரங்கியருளும் உத்தாரகனுயுள்ள ஆசார்யன் ஆசிரயிக்கக் கிடைப்பனேல் மிகவும் சீரியதாகும். உபகாரகனுகிய ஆசார்யனை யடைந்து நன்மையைப் பெறுவதென்பது அருமையாகும். ஏனென்றுல்;—நின்றவாநில்லா நெஞ்சையுடையனுகிய இவனுக்குச் சத்வகுணம் தலையெடுத்து, பகவத்விஷயத்தைப் பெறவேண்டுமென்று உறுதிகொண்டு, ஆசார்யன் செய்த சோதனைக்கெல்லாம் இசைந்திருந்து, அவனுக்கு வேண்டிய பணிவிடை செய்து, அவனருள் பெறுவது அருமையென்பது தெளிவாக விளங்கவில்லையா? ஆதலால் உத்தாரகாசார்யன் கிடைப்பதுதான் சிறந்ததாகும். இந்த உத்தாரகத்வமும், க்ருபாமாத்ர ப்ரஸக்தத்வமும் ஒருங்கமையப்பெற்ற ஆசார்யத்வப் பூர்த்தி எம்பெருமானுரிடத்திலே யுள்ளது. ஆகையால் இவரது ஸம்பந்தமே ஒப்புயர்வற்றதாகும்.

ஆண்டுகள் திங்கள் நாள்களாய்க் கழிந்து செல்கின்ற இந்நாளில் அம்மை வயிற்றிலும் யமன் கயிற்றிலும் மாறிமாறிக் கட்டுண்டு ஓய்வின்றிக்கே பல்பிறவிகடோறும் உழன்று திரியும் நமக்கு எம்பெருமானுர் திருவவதரித்தது பெரும்பேருகும். இப்படி எம்பெருமானுர் திருவவதரித்து நல்லடிக்காலமாய்ச் சென்ற அந்நாளில அவர் கடாக்ஷத்துக்கு இலக்காம்படி ஒரு பிறவி நேர்ப்பெற்றதில்லை. அதனுல் பிறவிப்பெருங்கடலை நீந்தும் ஜன்மமுண்டாகவில்லையென்று திண்ணமாய்ச் சொல்லலாம். இங்ஙனம கருவிலே திருவிலாதிருக்கிற நாமும் இழக்கவேண்டாதபடி ஆசார்ய பரம்பரையைப் பலபடியாகப் பெருக்கி அமைத்து, அவ்வழியாலே தம்முடைய ஸம்பந்த ஸம்பந்தம் நமக்குமுண்டாகி உஜ்ஜீவிக்கும் விரகு தேடிய எம்பெருமானுரின் பேரருளின் பெருமை பேசலாகுமோ? பரம ஆஸ்திகர், இப்பொழுதுள்ள ஆசார்யர்களை, 'பிறவிக்கடலிற் கிடந்துழல்கின்ற நம்மை எம்பெருமானுர் ஸம்பந்தம் பெறும்படி செய்தனரே; இவர் அந்த எம்பெருமானுரிலும் சிறந்தவராவர்' என்று கொண்டாடிக் களிப்பர். அறிவிலிகள் இதற்கெதிர்த்தட்டாக ஆசார்யர்களை அநாதரிப்பர்களென்பது சொல்லாமலே பெறப்படும்.

ஆர்த்தி தலையெடுத்து கண்ணீர் சோர நின்று, 'ஐயனே! அருள் செய்வாய்' என்று அடிதுடித்து நின்ற பரதனுக்கு அருகு செல்ல வகையின்றிக்கே, "ஸஹிதஃ வாவணோவஃ" என்று அனைவீச நின்றார் பெருமாள். இவ்வாறிருந்த பெருமாளே இவரது வரவையும் நினையாமல் வனத்திற்கண்டதலைய வதனு செய்துகொண்டு திரியும் குகனைக்கிட்டி 'நீ எனக்குத் தம்பியன்றோ' என்று ஆதரித்தனர். "மாமேஹுந ஸஹிதொ ராமொலக்ஷ்மணெநவ ஸீதயா" என்று குகனுடன் கூடியபிறகு இளையபெருமாளுட னும், பிராட்டியுடனும் கூடியதாகத் திருவுள்ளத்திற் கொண்டார். இதனால் எம்பெருமானை இவன் தானாகப்பற்றும்போது இவனுக் குள்ளது நன்மையேயாகிலும், அதுவும் பயனற்றதாகும். எம்பெரு மான் தானாகவே இவனை விஷயீகரித்தானாகில் இவனுக்குள்ளது தோஷமேயாகிலும் அதுக்கு இவன் அஞ்சவேண்டாமென்பதும் வெளியாயின. இவன் எம்பெருமானைப் பற்றுதலாகிய ஸ்வகத ஸ்வீகாரத்தைக் காட்டிலும், எம்பெருமான் இவனை விஷயீகரித்த லாகிய பரகதஸ்வீகாரம் மிகவும் சிறந்ததென்று பெறப்படும்.

இப்படி ஆசார்ய விஷயத்திலும் பரகதஸ்வீகாரம் கொண் டாடவேண்டும். இதனை யறியாத சிலர்கள் 'ஜீவனோபாயத்திற்காக அலைந்துகொண்டு திரிகிறார்கள்; இவர்களோ மோக்ஷத்திற்கு வழி காட்டப் போகிறார்கள்' என்று வாய்வந்தபடியெல்லாம் பிதற்று கிறார்கள். இதுமாத்திரமோ, எம்பெருமானர், மணவாளமாமுனி கள், நிகமாந்ததேசிகன், ஜநககுலசுந்தரி, ஸ்ரீ ஆண்டாள் என்ற இவர்களின் வைபவத்தைக் குறித்து மந்தமதியால் வீண் விவாதம் பேசிக் குதூகலங்கொள்வாரும் சிலருண்டு. கலி தோஷங்கெடத் தோன்றியவர்களின் விஷயத்தில இப்படி வீண் விவாதஞ்செய்யும் இவர்கள் கலியின் கொடுமையை விளக்கிக்காட்டுவதற்காகவே பிறந் தவராவர். இவர்களைக்கண்டு ஒதுங்கி வர்த்திப்பதுதான் அறிவுடை யோரின் கடமையாகும்.

(தொடரும்.)